## سُوْرَةُ التِّيْنِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَمَانِيْ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالتِّيْنِ وَالزَّيْتُوْنِ ۙ ﴿١﴾ وَطُوْرِ سِيْنِيْنَ ۙ ﴿٢﴾ وَهٰذَا الْبَلَدِ الْاَمِيْنِ ۙ ﴿٣﴾
لَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ فِيْٓ اَحْسَنِ تَقْوِيْمٍ ۫ ﴿٤﴾ ثُمَّ رَدَدْنٰهُ اَسْفَلَ
سٰفِلِيْنَ ۙ ﴿٥﴾ اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَلَهُمْ اَجْرٌ غَيْرُ مَمْنُوْنٍ ؕ ﴿٦﴾
فَمَا يُكَذِّبُكَ بَعْدُ بِالدِّيْنِ ؕ ﴿٧﴾ اَلَيْسَ اللّٰهُ بِاَحْكَمِ الْحٰكِمِيْنَ ﴿٨﴾ ع ٢٠

## سُوْرَةُ الْعَلَقِ مَكِّيَّةٌ وَّهِيَ تِسْعَ عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اِقْرَاْ بِاسْمِ رَبِّكَ الَّذِيْ خَلَقَ ۚ ﴿١﴾ خَلَقَ الْاِنْسَانَ مِنْ عَلَقٍ ۚ ﴿٢﴾
اِقْرَاْ وَرَبُّكَ الْاَكْرَمُ ۙ ﴿٣﴾ الَّذِيْ عَلَّمَ بِالْقَلَمِ ۙ ﴿٤﴾ عَلَّمَ الْاِنْسَانَ مَا
لَمْ يَعْلَمْ ؕ ﴿٥﴾ كَلَّآ اِنَّ الْاِنْسَانَ لَيَطْغٰٓى ۙ ﴿٦﴾ اَنْ رَّاٰهُ اسْتَغْنٰى ؕ ﴿٧﴾ اِنَّ
اِلٰى رَبِّكَ الرُّجْعٰى ؕ ﴿٨﴾ اَرَءَيْتَ الَّذِيْ يَنْهٰى ۙ ﴿٩﴾ عَبْدًا اِذَا صَلّٰى ؕ ﴿١٠﴾
اَرَءَيْتَ اِنْ كَانَ عَلَى الْهُدٰٓى ﴿١١﴾ اَوْ اَمَرَ بِالتَّقْوٰى ؕ ﴿١٢﴾ اَرَءَيْتَ اِنْ
كَذَّبَ وَتَوَلّٰى ؕ ﴿١٣﴾ اَلَمْ يَعْلَمْ بِاَنَّ اللّٰهَ يَرٰى ؕ ﴿١٤﴾ كَلَّا لَئِنْ لَّمْ يَنْتَهِ ۙ
لَنَسْفَعًا بِالنَّاصِيَةِ ۙ ﴿١٥﴾ نَاصِيَةٍ كَاذِبَةٍ خَاطِئَةٍ ۚ ﴿١٦﴾ فَلْيَدْعُ نَادِيَهٗ ۙ ﴿١٧﴾

அத்தியாயம் : 95

## அத்தீன் _ அத்தி

வசனங்கள் : 8 மக்கீ ருகூஃ : 1

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. அத்தியின் மீதும், ஜைதூனின் (ஒலிவத்தின்) மீதும் சத்தியமாக_
2. ஸினாய் மலையின் மீதும் சத்தியமாக_
3. (மக்காவாகிய) அபயமளிக்கும் இந்நகரத்தின் மீதும் சத்தியமாக_
4. நிச்சயமாக நாம் மனிதனை மிக அழகான அமைப்பில் படைத்திருக்கின்றோம்.
5. பின்னர், அவனைத் தாழ்ந்தோரிலும் மிகத் தாழ்ந்தோனாக திருப்பினோம்.
6. விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்கின்றார்களே அத்தகையோரைத் தவிர_ அவர்களுக்கு முடிவடையாத (நற்) கூலியுண்டு.
7. (இச்சான்றுகளுக்குப்)பின் (மனிதா!) நியாயத் தீர்ப்பு நாள் விஷயம் பற்றி எது உன்னை பொய்யில் ஆழ்த்தியது ?
8. தீர்ப்பளிப்போர்களிலெல்லாம் அல்லாஹ் மிக்க மேலாகத் தீர்ப்பளிப் போனாக இல்லையா?

அத்தியாயம் : 96

## அல் அலக் _ இரத்தக்கட்டி

வசனங்கள் : 19 மக்கீ ருகூஃ : 1

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. உம்முடைய இரட்சகனின் (சங்கையான) பெயரைக்கொண்டு நீர் ஓதுவீராக! அவன் எத்தகையவனென்றால் (படைப்பினங்கள் அனைத்தையும்) படைத்தான்.
2. மனிதனை (அட்டைப்பூச்சிபோன்று ஒட்டிக்கொண்டிருக்கும்) இரத்தக் கட்டியிலிருந்து அவன் படைத்தான்.
3. நீர் ஓதுவீராக! மேலும், உமதிரட்சகன் மிக்க சங்கையானவன்_
4. அவன் எத்தகையவனென்றால், எழுதுகோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான்.
5. மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் (அல்லாஹ்வாகிய) அவன் கற்றுக்கொடுத்தான்.
6. (இவ்வாறு படைக்கப்பட்ட மனிதன் அவனைப்படைத்த அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செய்கிறானா?) இல்லை; நிச்சயமாக மனிதன் வரம்பு மீறுகிறான்_
7. அவன் தன்னை (இரட்சகனிடமிருந்து) தேவையற்றவன் எனக்காணும் பொழுது.
8. நிச்சயமாக உமதிரட்சகனின்பக்கமே (அவன்) மீளவேண்டியதிருக்கின்றது.
9. தடுக்கின்றானே அவனை (நபியே!) நீர் பார்த்தீரா ?
10. ஓர் அடியாரை அவர் தொழுது கொண்டிருக்கும்பொழுது,
11. அவர் நேர்வழியின் மீதிருந்து (ம் அவரைத்தொழவிடாமல் தடுத்தவனை) நீர் பார்த்தீரா?
12. அல்லது பயபக்தியைக்கொண்டு ஏவுகிறவராக அவர் இருந்தும்;
13. அவன் (அவரைப்) பொய்யாக்கி, முகத்தையும் திருப்பிக் கொண்டான் என்பதை நீர் பார்த்தீரா ?
14. நிச்சயமாக அல்லாஹ் (அவனைப்)பார்க்கின்றான் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லையா ?
15. (முஹம்மது தொழுதால் நான் அவர் கழுத்தின் மீது மிதிப்பேன் என அபூஜஹல் கூறியவாறு) அல்ல! (இத்தீய செயலிலிருந்து) அவன் விலகிக் கொள்ளாவிடில், நிச்சயமாக (அவனது) முன்னெற்றி உரோமத்தைப்பிடித்து நாம் இழுப்போம்.
16. தவறிழைத்து பொய்யுரைக்கும் முன்னெற்றி ரோமத்தை.
17. ஆகவே, (தன் உதவிக்காக) தனது சபையோரை அவன் அழைக்கட்டும்.